# கதிர்காம வடிவேலவர்

★

பண்டிதர் செ. பூபாலபிள்ளை
எழுதியது.

★

அச்சுப் பதிவு:
ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

சண்முகநாத

7676

# காம வடிவேலவர்

பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள்
(மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர்.
அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர்.)

கதிர்காமத்திலே திருவிழா நடைபெறுகிறது. கதிர்காம வடிவேலவர் யானைமீது ஏறி வள்ளிநாயகியார் சந்நிதிக்குப் பவனி வருகிறார். அவரைப் பக்த கணங்கள் நாலா பக்கமுஞ் சூழ்ந்து உளமுருகி வழிபடுகின்றனர். இலங்கைத் தமிழ் மகளிர் கர்ப்பூரத் தீபமும், மாவிளக்குந் தலைமீது தாங்கி 'முருகா, முருகா, முருகா, முருகா' எனக் குயிலினும் இனிய குரலிற் பாடுகின்றனர். இந்தியப் பெண் மணிகள் 'கதிர்காம வடிவேலவருக்கு அரோகரா' எனக் குதலை மொழியிற் கூறுகின்றனர். சிங்கள மாதர் வெள்ளை உடை உடுத்து மென்கரத்துப் பூக்கொண்டு நிரை, நிரையாகத் தொடர்ந்து சென்று கிளி மொழியிற் 'சாது சாது, சாது' என்று சாற்றுகின்றனர். ஆடவர் 'வேல்வேல் வெற்றிவேல், வேலும் மயிலும் வேலாயுதமும்' என்றெல்லாம் பாடுகின்றார்கள். கைகொட்டிக் காவடி ஆடுகிறார்கள். வடிவேலவர் காவடிக்குள்ளே கலந்து வந்து திருவருள் புரிகிறார், இந்தத் திருக்கூட்டத்தின் மத்தியில் இருந்து,

> "கண்கதிரை காணுமிரு காதரக ராக்கேட்கும்
> பண்முருகற் பாடும் பதஞ்சூழும் — எண்ணமெலாங்
> கந்தவேள் மேற்செல்லுங் கட்டாய முத்திவரும்
> வந்துபார் சந்நிதியின் மாண்பு"

என்று சைவ நன்மக்களாகிய நமையெலாம் இந்த நல்ல தருணத்தில் ஒரு முருக பக்தர் கூவி அழைக்கிறார். கதிர்காமத் திருக்கார்த்திகை உற்சவம் நடைபெறுகின்ற புண்ணிய காலத்திலே கதிர்காம வடிவேலவரைப் பற்றி நாமெலாம் ஒரு சிறிது சிந்திப்பது நலமாகும்.

பண்டைத் தமிழ் மக்கள் தமக்கு உறைவிடமாகிய இந்தப் பூமியை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு பகுப்பாகப் பகுத்து ஒவ்வொன்றுக்கும் இலக்கணமும், இலக்கியமும் வகுத்துக் கூறியுள்ளனர்.

*"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்*
*சேயோன் மேய மைவரை உலகமும்"*

என்ற தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணைச் சூத்திரப் பகுதி மலையும், மலை சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலப் பகுப்புக்கு முருகவேள் தெய்வமாகும், என நமக்கெலாம் அறிவுறுத்துகின்றது. இந்தக் கடவுளை வழிபடுவதற்குக் குறிஞ்சி நிலத்து வாழுங் குறவர், வேட்டுவர் முதலியோர் ஒன்று கூடி வெறியாட்டயர்வதற்கு வேண்டும் பொருள்கொண்டு வெறியாட்டயருவார்கள். இதனை,

*"காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்*
*சால்வ தலைவனெனப் பேஎ விழவினுள்*
*வேல னேத்தும் வெறியு முளவே*
*அவை வாயு மல்ல பொய்யு மல்ல*
*நீயே வரம்பிற்றிவ் வுலக மாதலில்"*

என்ற பரிபாடற் பகுதி நமக்கு உணர்த்துகிறது. அன்றியும் இந்த உண்மையினைச் சிலப்பதிகாரத்துள் அமைந்து கிடக்கும் குன்றக் குரவையும் அழகாக எடுத்துக் கூறுகிறது.

குறமகளிர் குரவைக் கூத்தாடும்பொழுது பாடிய உருசிகரமான இதுபற்றிய ஒரு சில பாடல்களை ஈண்டுத் தருகின்றோம்.

***"சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்***
***ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே***
***பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்***
***சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே."***

*"அணிமுகங்க ளோராறு மீராறு கையும்*
*இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே*
*பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்*
*மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே."*

*"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்*
*திருமுலைப்பால் உண்டான் திருக்கை வேலன்றே*
*வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து*
*குருகு பெயர்குன்றங் கொன்ற நெடுவேலே."*

*"குறமக ளவளெம குலமக ளவளொடு*
*மறுமுக வொருவனின் னடியிணை தொழுதேம்*
*துறைமிசை நினதிரு திருவடி தொடுனர்*
*பெறுகநன் மணம்விடு பிழைமணம் எனவே."*

இந்த வரிப் பாடல்களின் உள்ளே திருமுருகனது திரு அவதாரமுங் கூறப்படுகிறது.

*"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்*
*திருமுலைப்பால் உண்டான் திருக்கைவேல் அன்றே"*

என்பது அது. திருமாலும், பிரமதேவனும், தேவேந்திரனும், அட்டதிக்குப் பாலகரும், முனிவர்களும், தேவர்களும், கிரவுஞ்சன், சூரபன்மன் ஆதியோரால் மிகவும் வருந்தினர். வருந்திய இவர்கள் கயிலைக்குச் சென்று சிவபெருமானிடந் தமது குறையினை முறையிட்டனர். சிவபெருமான் இவர்கள் மீது அருள்கொண்டு தமக்குரிய ஐந்து முகத்தோடு அதோ முகமுந் தந்து ஒவ்வொரு திருமுகந்திலும் அமைந்துள்ள நெற்றிக் கண்களில் இருந்து ஒவ்வொன்றாக ஆறு அக்கினிப் பொறிகளைச் சிந்தினர். இந்த உண்மையினை,

*"திற்புறு மமரர் யாருநெஞ்சு துண்ணென நீடு*
*மற்புத நீரராகி அருண்முறை உன்னிப் போற்றச்*
*சிற்பரன் தான்கொண் டுள்ளதிரு முகமாறு தன்னிற்*
*பொற்புறு நுதற்கண்தோறும் புலிங்கமொன்*
*றொன்று தந்தான்"*

எனக் கந்தபுராணச் செய்யுள் அற்புதமாகக் கூறுகிறது. இந்தத் தருணத்திலே சிவபெருமான் அக்கினி தேவனை யும், வாயு பகவானையும் அழைத்து "நீங்கள் இந்த அக் கினிப் பொறிகளைச் சுமந்து சென்று கங்கா நதியில் விடுங் கள்; அவள் இவற்றைச் சரவணப் பொய்கையுட் சேர்ப் பாள்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அதன்படி அக் கினி தேவனும், வாயு பகவானும் அவற்றைப் படாதபாடு பட்டுச் சுமந்து சென்று கங்கையுள் விடுத்தனர். உல கெலாங் கைதொழுதேத்தும் அம்மஙகை அவற்றைச் சர வணப் பொய்கையுட் சேர்த்தாள். சேர்க்கப்பட்ட அவை தாமே

*"அருவமு முருவுமாகி யனுதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்*
*கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள் பன்னிரண்டுங்*
*கொண்டே*
*யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய"*

திருமுருகனது வரவு கண்டுகளித்த திருமாலும் ஏனைய தேவர்களும் கார்த்திகைப் பெண்களைப் பார்த்து நீங்கள் உங்கள் திருமுலைப் பாலை முருகனுக்கு ஊட்டிப் போற்றி வளர்ப்பீராக எனக் கூறினர். இதனைக் கேட்ட கார்த்திகைப் பெண்கள் அறுவருங் களிப்புடன் தங்கள் மென் கொங்கை களில் ஊறிய திருமுலைப் பாலை முருகனுக்கு ஊட்டி, வண்டு மொய்யாத மலர்ப் பாயல்களில் வளர்த்திக் கண் துயில் வித்தனர்.

இந்தக் காலத்திலே உமையவள் இளைய பிள்ளையாரைக் காணவேண்டுமென்ற தலையாய தாயன்பினுலே இறைவ னுடன் நரைவெள்ளேறு ஊர்ந்து சரவணப் பொய்கை யைச் சார்ந்தாள். அத்தருணம் அன்னையைக் கண்ணுற்ற ஆறு அழகு குழந்தைகளும் ஆராமையுடன் அவளை நோக்கி ஓடிவந்து அணைந்தனர். அதனைக் கண்ணுற்ற உலக மாதாவாகிய உமையவள் உளமுருகி அவர்களைப் பேரன் புடன் ஒன்றாகத் திருக்கரங்களாற் கட்டித் தழுவித் தூக்கி

எடுத்து ஆறு முகமும், பன்னிரு கரங்களும், இரு பாதங்களுமுள்ள கந்தப்பெருமானுக்கி நாமெல்லாம் வழிபட்டு உய்யுமாறு உதவினுள். இந்த வரலாற்றினை,

"சரவணந்தனிற் றனதுசே யாறுருத் தனையும்
இருகரங்களால் அன்புடன் எடுத்தனள் புல்லித்
திருமுகங்க ளோராறு பன்னிருபுயஞ் சேர்ந்த
உருவமொன் றெனச்செய்தனள் உலகமீன் றுடையாள்"

எனக் கந்தப்புராணந் திருமுருகனது திருஅவதாரத்தினைச் சிறப்புறக் கூறுகின்றது.

கடைச்சங்க நூல்களாகிய பரிபாடலும், பத்துப் பாட்டில் முதற் பாட்டாக அமைந்துள்ள திருமுருகாற்றுப்படையும், திருமுருகனது தோற்றுவாயினைச் சிறிது மாறுபடுத்திக் கூறுகின்றன. அவற்றையும் ஈண்டு தருகின்றும்.

இறைவன் உமாதேவியாரோடு இன்புற்றிருக்கும்போது உண்டாகிய கருவைப் புணர்ச்சி தவிர்க என இந்திரன் வேண்டினுன்.

அவன் வேண்டுகோளுக்கிசைந்து இறைவன் அதனைப் பலவாகச் சிதைத்தருளினுன். சிதைத்த அவற்றை முனிவர்கள் எழுவரும் பெற்று ஓமத்தீயின்கண் அவியுணவோடு இட்டனர். இட்டு அவை வெந்த பின்பு அவர் தரும பத்தினிமார் எழுவரிடமும் எடுத்துக் கொடுத்தனர். அருந்ததி ஒழிந்த ஏனையவராகிய கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அவற்றை உண்டு கருப்பங்கொண்டு சரவணப் பொய்கையில், மலர்ப் பாயலில் முருகனைப் பெற்றுர்கள். அத்தருணம் இந்திரன் வலிமை மிகுதியால் தனது வச்சிராயுதத்தால் அவர்களை எதிர்த்தான். ஆறு வேறுருவங்களாய் அமைந்திருந்த முருகன் ஒருருவாகிக் குழந்தைப் பருவத்தே நிராயுதபாணியாய் நின்று இந்திரனைப் போரில் வென்ற காரணத்தால் இந்திரன் முருகனைத் தேவசேனுபதியாக்கிக் கௌரவித்தான் என்பது அது.

''கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய
அறுவர் மற்றையோரு மந்நிலை யயின்றனர்
மறுவறு கற்பின் மாதவர் மனைவியர்
நிறைவயின் வழாஅது நிற்சூலினரே
நிவந் தோங் கிமயத்து நீலப் பெருஞ்சுனைப்
பயந்தோ ரென்ப பதுமப் பாயல்''

என பரிபாடலில் அமைந்துள்ள செவ்வேளைக் குறித்த ஐந்தாவது பாடற் பகுதி இதனை ஒருவாறு விளக்குகிறது.

இதே வரலாற்றினை மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் பாடியருளிய திருமுருகாற்றுப்படையில் அமைந்துள்ள ஆறு பகுதிகளுள், ஆறுவது பகுதியாகிய பழமுதிர் சோலையுள் அழகாக எடுத்துக் கூறியுள்ளனர்.

''நெடும்பெருஞ் சிமையத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர்ப் பயந்த ஆறமர் செல்வ'' என்பது அது.

இந்தப் பகுதிக்கு உரை எழுதிய உச்சிமேற் புலவர் கொள் நச்சினுர்கினியர் 'இறைவனிடத்தினின்றும் இந்திரன் வாங்கிய கருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின், இறைவன் கூருகிய முத்தீக் குண்டத் திட்டதனைக் கூறிற்று. அங்ஙனம் அக்கினியின்கண் இட்டுச் சத்தி குறைந்த கருப்பத்தை முனிவர் எழுவரும் வாங்கித் தம் மனைவியர்க்குக் கொடுப்ப அருந்ததி ஒழிந்தார், விழுங்கிச் சூன் முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப் பாயலிலே பெற ஆறு வடிவமாக வளர்ந்தமை கூறிற்று' எனக் கூறுவதனுலும் விளங்குகிறது

வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வராகிப், பக்குவ ஆன்மாக்களுக்கெல்லாம் முத்தியை உதவுதற் பொருட்டு விரும்புவார்க்கு விரும்புவனவற்றைக் கொடுக்கும் இசை பேராளனுகக் கதிர்காமத்தில் காட்டு மத்தியில் எழுந்தருளி விற்றிருக்கும் முருகப்பெருமானிடம் கந்தழியைப் பெற்

ருன். ஒருவன் அதனைப் பெருதான் ஒருவனுக்கு வழிப் படுத்துக் கூறுவதுபோல நமது முருக பக்தர் நாம் முற் கூறிய

"கண்கதிரை காணுமிரு காதரக ராக்கேட்கும்
பண்முருகற் பாடும் பதஞ்சூழும் — எண்ணமெலாம்
கந்தவேள்மேற் செல்லுங் கட்டாயம் முத்திவரும்
வந்துபார் சந்நிதியின் மாண்பு" என்ற வெண்பா

மூலம் நமையெலாங் கூவி அழைக்கிருர்.

'கந்தழியாவது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்' என நச்சினுர்க்கினியர் கந்தழிக்கு வரவிலக்கணங் கூறுகிருர். இந்த அருவ வழிபாடுள்ள கதிர்காமம் வேட்டுவராற் போற்றி வளர்க்கப் பட்ட குறக்கொடியாகிய வள்ளிநாயகியை, மானீன்ற மட மகளை, வடிவேலர் காதல் மணம் புரிந்த இயற்கை அழகு வாய்ந்த ஓர் இடமாகும். இதனை இங்குள்ள தோற்றங் களைக் கொண்டும், வழிபாடு நடைமுறைகளைக் கொண்டும், நாம் ஊகித்தறியலாம். இதனைத் தற்கால நாகரிகத்துக் கேற்ற நகரமாக மாற்றுவது இயற்கை அழகைச் சிதைப் பதாக முடியும். இயற்கையே அழகு. அழகே முருகன்.

இனி இங்கு தோற்றும் இயற்கை அழகினுள் நமது மனத்தை ஒரு சிறிது இறக்குவாம். இங்கு தேனுக்குக் குறைவில்லை. மானுக்குக் குறைவில்லை. மாணிக்க கங்கை யுள் மீனுக்குக் குறைவில்லை. தினை மாவுக்குக் குறைவில்லை. மலருக்குக் குறைவில்லை. வண்டுகள் கூடி முரலுகின்றன. நீலமலர்கள் நிறைந்த சுனைகள் பல உள்ளன. மிளகுக் கொடிகளும் மந்திக் கூட்டமும் கருங் குரங்குகளும் இருக் கின்றன. செங்காந்தள் மலர்களும் உள்ளன. யானைகளும், பன்றிகளும், காட்டெருமைக் கடாக்களும், கரடிகளும் நிரம்ப உள்ளன. வேட்டுவர், குடியிருக்கின்றனர். மந்தியும் அறியா நாகமரங்கள் நறுமலர் சொரிகின்றன. வாழையுந், தெங்கும், பலாவும் வழிநீளம் வளர்ந்துள்ளன. காட்டுக் கோழிகளும், மயில்களும் கதறித் திரிகின்றன. இழுமெனு

மோசையோடு கூடிய மலையருவிகள் பல பாய்கின்றன. பழமுதிர் சோலைகளுக்குக் குறைவில்லை. ஆதலால் கதிர் காமத்தை வடிவேலவர், வள்ளிநாயகியைக் களவொழுக்கத் திற் கடிமணம் புரிந்த இயற்கை அழகு வாய்ந்த புண்ணி யப் புனிதப் பூமியாக இலங்கைவாழ் மக்களும் மக்கள் அர சாங்கமும் என்றும் பாதுகாத்துப் பழமுதிர் சோலையாகவே வைத்துக்கொள்ள வேண்டும். திருமுருகாற்றுப்படையுள் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பாடப்பட்ட இயற்கை அழகு நிரம்பிய பழமுதிர் சோலையையா! நாம் அழிப்பது. இல்லை இல்லை. அதன் இயற்கைச் செல்வத்தைப் பாது காக்கவேண்டும். அருணகிரிநாதர் கிள்ளை வடிவாக இந் தத் திவ்விய திருத்தலத்தை வந்து அடைந்து திருப்புகழ் பாடியுள்ளார். அவர் காலத்திலே மாணிக்கத்தையும், முத் துக்களையும் வாரி விசிக்கொண்டு அழகிய அருவிகள் பல கதிர்காமத்தைச் சிறப்பித்தன. கருங் குரங்குகள் பழுத்த பலாப்பழச் சுளைகளைப் பிறி எடுக்கும்போது கூட்டங் கூட்ட மாகச் சண்டை இட்டன. வாழைப் பழங்களையும், மாம் பழங்களையும், பிடிங்கிப் புசித்து இன்புற்றன, என்றெல் லாம் அவர் திருப்புகழ் கதிர்காம இயற்கை அழகை எடுத் துக் கூறுகிறது.

கதிர்காமத்தைப் பற்றிப் பொன் அருணுசலந்துரை யவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைப்படி சூரசம்மாரம் நடக்கும்போது முருகனுடைய பாசறை வீடுகளுள் ஒன் ருக அமைந்து பயன்பட்டது இந்கக் கதிர்காமப் பதி யாகும். சூரசம்மாரம் நிறைவேறிய பின்பு குமரநாயகன் வள்ளிநாயகியுடன் கதிர்காமத்தில் இன்புடன் உறைந்து விட்டான். வடநாட்டிலுள்ள தர்மபத்தினியாகிய தெய்வ நாயகி அம்மையாரை மறந்துவிட்டான். குமரநாயக னுடைய பிரிவினுல் மனமுடைந்து வாடி வதங்கிய தெய்வ நாயகியார் முத்துலிங்கேசர் என்னும் முனிவரை முரு கனை அழைத்து வருமாறு கதிர்காமத்திற்குத் தூதாக அனுப்பினர். அனுப்பும்பொழுது சடாட்சரத்தை அவரிடங்-

கொடுத்து, இதனுள் முருகன் அடக்கமுடையான். இதனை நீங்கள் மடியுள் மறைத்துச் சென்று அவனை அழைத்தால், அவன் உங்கள் வேண்டுகோளின்படி உங்களுடன் வருவான், என்று கூறினார்கள். முத்துலிங்கேசர் இதனைப் பெற்றுக்கொண்டு தென்கதிரையை வந்தடைந்தார். அடைந்த அவர் அங்கு ஓமகுண்டம் அமைத்து நாற்பது நாட்கள் பகல், இரவாக ஊண், உறக்கமின்றி முருகனை நோக்கி அருந்தவம் புரிந்தார். அவர் அந்த விரதத்தை மேற்கொண்ட முதல்நாள் அன்றே ஓமகுண்டத்துக்கு வேண்டிய சமிதைகளையும், அர்ச்சனைக்கு வேண்டிய பூக்கள், பத்திரங்களையும் எடுத்து உதவுபவர்களாக ஒரு வேடுவச் சிறுவனுஞ் சிறுமியும் முத்துலிங்கேசரை வந்தடைந்தார்கள். நாற்பதாம் நாள் முனிவர் விரதத்தை நிறைவேற்றி முருகனைக் காணாது கலங்கிப் பால் பருகிப் பாரணை பண்ணிக்கொண்டு படுப்பதற்குச் சரிந்தார்.

அத்தருணம் அந்த வேடுவச் சிறுவன் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு முனிவருக்கு நித்திரா பங்கஞ் செய்தான்.

முனிவரர் சிறுவன்மீது சீற்றங்கொண்டு நான் ஒரு மண்டலகாலம் உண்ணாது உறங்காதும் இருந்து அருந்தவம் புரிந்து இன்று கொஞ்சம் பால் பருகிச் சிரமபரிகாரஞ் செய்ய யத்தனிக்கும்பொழுது உடன் இருந்து இவற்றை எல்லாங் கண்ணாரக் கண்ட நீ இப்படித் தொந்தரவு செய்யலாமா? என்று கூறிக் கோபித்தார். இதனைக் கேட்ட வேட்டுவச் சிறுவன் நாலு எட்டு முன்னுக்கு நடந்து சென்று நின்று மீட்டும் புறுபுறுத்தான். இதனைக் கேட்டதும் முத்துலிங்கேசருக்குக் கடுங் கோபமுண்டாயிற்று. சிறுவனைத் துரத்திப் பின்தொடர்ந்தோடினார். சிறுவனும் பிடிபடாது ஓடிச்சென்று இன்று கதிர்காம வடிவேலவர் திருக்கோவில் அமைந்திருக்கின்ற மகாதேவாலய இடத்தில், மாணிக்க கங்கையில் அன்று அமைந்திருந்த ஆற்றிடைக் குறையில் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் அலங்கார ஆபரணமணிந்த மார்பும் உடையவராய்த் திருக்கரத்தே

வேல் தாங்கி வீற்றிருந்தார். இந்த அழகு காட்சியைக் கண்ணாரக் கண்டு களிப்புற்ற முனிவர் முருகா இதுவா உனது திருவிளையாடல் எனக் கூறி மருவுமடியார்கள் மனத்து இன்றும் விளையாடும் மரகத மயூரப்பெருமானை மெய்மயிர் சிலிர்க்க, ஆனந்தக் கண்ணீர் தாரை, தாரையாகச் சொரியச் சிரசின்மேற் கூப்பிய கரத்தராய்க் குமராய நம எனப் போற்றி அவரை வலம் வந்தார். அத்தருணம் குமர நாயகன் வள்ளிநாயகி இடம் 'பெண்ணமுதே, முனிவரர் மடியுட் சடாட்சரம் இருக்கிறது. அதனுள் நான் அடக்கம். என்னை அழைத்துக் கொண்டு வடநாட்டுக்குத் தெய்வநாயகியிடம் செல்ல இவர் இங்கு வந்திருக்கிறார். பேரன்புடையாய், நீர் முனிவரிடம் முந்தானைப் பிச்சை கேள். அவர் என்னிடம் ஒன்றும் இத்தருணம் கைவசமில்லையே என மனமடிவுறுவார். அத்தருணம் நீர் உங்கள் மடியினுள் மறைத்து வைத்திருக்கும் பொருளை ஈயுங்கள் சுவாமி என்று இரந்து பின்நில். அவர் ஒரு சத்திய வந்தர். அருள் நிரம்பியவர். அவர் அதனை உனக்கு நிட்சயமாகத் தருவார். அஞ்சாதே. விரைந்து செல். நாம் இன்றுபோல் என்றும் இன்புற்றிருக்கலாம் என்று குறக்கொடிக்கு நல்லதொரு உபாயங் கூறினன் குமரநாயகன். அவனது கூற்றின்படி வள்ளிநாயகி அவனை வலம்வரும் முத்துலிங்கேசரை வழி மறித்து மடிப்பிச்சை வேண்டினள். அவரும் அவளது வேண்டுகோளின்படி சடாட்சரத்தை அவளுக்குத் தன்னை மறந்து, தன் செயலை மறந்து திருமங்கிலியப் பிச்சையாக ஈந்து உவந்தார். ஈழம் வடநாட்டவரும் வந்து வணங்கும் புண்ணிய திருப்பதியாயிற்று. யாரே தென்கதிரை மகிமையினை அறியாதார்?

அந்தச் சடாட்சரமே இன்றும் அட்சதைப் பெட்டியுள் அடைத்து யானைமீது ஏற்றிப் பவனி வருவதாகும். வசநாயக்கா கோவிலுட் சென்று தனி அறையுள் உள்ள அதனைத் தலைவணங்கிப் பட்டுத் துகிலாற் தமது கண்களை

மறைத்துக் கட்டித் திருக்கரங்களை நீட்ட அதுதானே வந்து அவர் கரதலத்தமரும். அதனைப் பேழையுள் வைத்துக் கப்புகனரிடங் கொடுக்க அவர்கள் மேற்கட்டியுட் பேழையை மறைத்தபடி யானை நடை நடந்துசென்று பிணிமுகம் என்ற திருப்பெயருள்ள கதிர்காம வடிவேலவர் ஏறும் அலங்கரிக்கப்பட்ட யானை முதுகில் ஏற்றுவர் என மகாதேவாலயத் திருப்பணியாளராக இருந்த ஒரு முனிவரர் இவற்றை எமக்கெடுத்துக் கூறினர்.

இக்கூறிய உண்மைகளைத் தென்கதிரையில் அமைந்துள்ள சடாட்சரப் பிரதிமைகளைச் செப்புத் தகடுகளில் அமைத்து முருகபக்தர்கள் வீடுகளில் வைத்தும், கோவில்களில் அமைத்தும் வழிபட்டு முருகன் அருளைப் பெறுவதில் இருந்தும், முதன்முறை கதிர்காம யாத்திரை புரிவோர் மடிப்பிச்சை எடுத்து உண்பதில் இருந்தும் நாமெலாம் ஊகித்து உணரலாம். இன்றுள்ள கதிர்காம ஆலயத்தை அமைத்துக் கோவில் மான்மியங்களை வழங்கியவன் துட்டகைமுனு அரசனுவான். இவன் வேண்டுகோளுக்கிசைந்து கதிர்காம வடிவேலவர் தந்தை கவந்தீசனுடைய கட்டளைக்கு மாருக எல்லாள மன்னனுடன் யுத்தஞ் செய்யப் போவதற்கு விடையளித்ததோடு வெற்றிக் குறிகுறியுங் காட்டியதனுல் கைமுனு எல்லாளனை வென்ற பின்பு இன்றுள்ள கோவிலையும் அமைத்து மான்மியங்களும் வழங்கி வழிபட்டு உவந்தான். இந்த வரலாற்றினைத் திரு. இராசநாயக முதலியார் அவர்கள் கேசபுரி சுவாமிகள் கூறியதாகச் சிறிது மாறுபடக் கூறியுள்ளார்.

கதிர்காம வடிவேலவர் கோவிலுக்கு முற்காலங்களிலே மட்டகளப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்க் கப்புகமாரே பூசைபுரிந்து வந்தனர். கடைசியாகப் பூசை புரிந்த தமிழ்க் கப்புகனர் மாரிமுத்து என்பவர். இந்த உண்மையினைக் கதிர்காம வடிவேலவர் கோவில் வசநாயக்கமாரிடம் உள்ள கோவிற்

பதிவு ஏட்டிற் காணலாம். இந்தக் கப்புகமாரைக் கௌரவிக்கும் பொருட்டு மட்டக்களப்பு மக்களுக்குத் தீர்த் தோற்சவத்துக்கு (நீர்வெட்டுக்கு) முதல் இரவுத் திருவிழா கொடுக்கப்பட்டது. இதனை மட்டக்களப்பு மக்கள் தங்கள் உபயமாகக் கொண்டு செய்து கதிர்காம வடிவேலவரது திருவருள் பெற்று மகிழ்வுடன் வாழுகின்றனர். இத்தகைய கோவில்களை மண்டூர், வெருகலம்பதிகளில் அமைத்து முறைதவருது வழிபாடியற்றி வருகின்றனர்.

இத்தகைய திருவருள் நிரம்பிய ஈழத்து ஒப்பற்ற பண்டைப் பழம்பதியாகிய கதிர்காமத் திருப்பதியிலே பண்டு தொட்டுப் பெரியோர்கள் இருந்து கொண்டு கல்வி அறிவு ஒழுக்கங்களையும், சைவசமயத்தையும் வளர்த்துத் தருமம் வளர்த்த இடம் மடாலயமாகும். மடங்களிலே யாத்திரிகர் தங்க இடங்கொடுத்து அன்னதானம் வழங்குவது மாத்திர மல்ல செபம், பூசை, தியானம் முதலியனவும் நடைபெறு கின்றன. மடாதிபதிகள் கல்வி விருத்திக்கும், சமய விருத் திக்கும் போதனை மூலமுஞ், சாதனை மூலமும் துணைபுரிந் தார்கள். புரிகிருர்கள். புரிவார்கள். இத்தகைய புண்ணிய கைங்கரியம் புரியும் இடங்களை ஆதியில் அமைப்பதற்கு மடாதிபதிகளுக்குக் கதிர்காம வடிவேலவர் காட்சி மூலமுஞ், சொப்பன மூலமும் திருவாக்கு மூலமும் அறிவிக்க அந்தப புண்ணிய பூமிகளிலே வேதாகம சாஸ்திர விதிக்கமையப் பெரும் பொருள் விரயஞ் செய்து இன்றுள்ள மடங்களை அவர்கள் பண்டு அமைததனர். மடாதிபதிகளோடு கதிர் காம வடிவேலவர் மானிடச் சட்டை தாங்கி உருவத் திரு மேனியுடன் பேசினுர். துணைபுரிந்தார். இதற்கு வைத்தி லிங்கம் மார்க்கண்டு முதலாளியாகும் மடாதிபதியைத் திரு டர் மரம் வெட்டிப் பாதையில் வீழ்த்தி மறித்து மட ஊழி யருக்குச் சம்பளம் இடக் கொண்டுவந்த பணத்தைப் பறித் தமையும், அத்தருணம் கதிர்காமத்தான் தோன்ருத் துணை யாகச் சென்று வழக்கேற்படுத்த உதவத் திருடர் பிடிபட்டு மறியல் சென்று மீண்டமைபோன்ற பல பிரத்தியட்சப் பிர மாணங்களும், நீதித்தலச் சான்றுகளும் உள்ளன. இத்

தகைய பெருமை வாய்ந்த அறநிலையங்களாகும் மடங்களை மக்களின் நியாய புத்திக்கும், நவநாகரீகக் கொள்கைக்கும் ஏற்றவாறு மக்கள் அரசாங்கம் மாற்றஞ் செய்யப் புகுவது பெரும் பாவமுந் தவறுமாகும்.

முற்றத்துறந்த முனிவரராகும் மடாதிபதிகள் இயற்கை அறிவு, நூலறிவு, நுண்ணறிவு படைதத நமது அரசியல் வாதிகளிலும் மிகமிக மேம்பட்டவர்கள். மடாதிபதிகளாகிய முனிவர்களை வழிநடத்துவது திருவருள். அரசியல் மேதைகளையும் நம்மையும் எல்லாம் வழிநடத்துவதும் திருவருளே. எனினும் நம்மிடம் உள்ள திருவருள் பாற்பசுவின் உடம்பெல்லாம் பரந்து செறிந்துள்ள பால் போன்றது. மடாதிபதிகளிடமுள்ள திருவருள் பாற்பசுவின் முலையிற் சுரந்துள்ள பால் போன்றது. முனிவர்களிடத்துள்ள திருவருள் நம்மிடம் இல்லை. இதனாலன்றோ நமது இன்றைய அரசியல் ஞானிகளைச் சிருட்டித்து உதவிய பல்கலைக் கழகங்கள் எவையும் இதுவரையும் ஒரு கௌதம புத்த பகவானை, ஒரு முகம்மது நபிநாயகத்தை, ஒரு கிறிஸ்துநாதரை, ஒரு இராமகிருஷ்ண பரமகம்சதேவரைப் படைத்து நமக்கு உதவவில்லை. இந்த உண்மையினைச் சலவாயுக்குண்டு அணுகுண்டு உள்ள இந்த விஞ்ஞான யுகத்திலே இலங்கையர் யாவரும் ஊன்றிச் சிந்தித்துத் தெளிந்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். தங்கள் முடிவினை மக்கள் அரசாங்கத்திற்கு இடித்துக் கூறி உணர்த்த வேண்டும்.

( கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே )

மடாதிபதிகளாகிய முற்றத் துறந்த முனிவர்களைப் பற்றி கடைச் சங்ககாலப் பாவாகிய திருமுருகாற்றுப்படை கூறுவதைப் பாருங்கள்.

*"கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்*
*தாம் வரம் பாய தலைமையர்......"*

கல்விக்குக் கரைகண்டவர் முனிவர்கள். பலவற்றையும் படித்தவர்களுக்குத் தாம் முற்றுப்புள்ளியாக உள்ள தலைமை

யுடையவர்கள் முனிவர்கள். இவர்களுக்கு அறிவு இயற்கையாகவே வளருகிறது. இதற்கு இவர்கள் புரியுந் தவமே முக்கிய காரணமாகும். கடவுள் வழிபாட்டால், தியானத்தால் மக்களுக்கு மனத்தெளிவேற்படும் என்ற உண்மையினை நாம் நன்கறிவோம்.

இங்ஙனமாகவும் கதிர்காமத்தைப் புனித நகராக்குவதற்குக் குறிப்பிட்ட புண்ணிய ஸ்தலங்களிலே வேத ஆகம விதிப்படி அமைத்த, திருவருள் நிரம்பிய, பாற்பசு முலை போன்ற அமுதசுரபிகளாகும். பெரும்பான்மைச் சிறுபான்மை மக்களாகும் நமையெலாம் பாதுகாக்கும் மடங்களை அழிப்பது மடமையேயாகும். நெருப்புக்கொள்ளி கொண்டு தலை சொறிவதுபோன்றதொரு தீச்செயலாகும். கதிர்காம வடிவேலவரது திருவருள் மென்மேலுந் துலங்கவும், ஈழ மக்கள் மகிழ்வுடன் இனிது வாழவும், நாடு செழிக்கவும் நல்ல மழை பெய்யவும், விளைவு ஏற்றமுறவும் கனமயாகம, தபோயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம என்ற ஐவகை யாகங்களை வளர்க்கும் மடங்கள் இருந்த புண்ணியத்தலங்களிலே என்றும் இருத்தல் வேண்டும். இதனை அழிப்பதால் அல்லது மாற்றுவதால் இலங்கையில் வாழும் பெரும்பான்மை சிறுபான்மை மக்கள் யாவருக்கும் தீங்கு ஏற்படும். இதற்குத் தூண்டுதலாக நிற்போர் விட்டிற் பூச்சி விளக்கில் விழுந்து அழிவதுபோல அழிந்தொழிவர். இஃது தருமநூல் கண்ட உண்மையாகும்.

கதிர்காம பூசை விதிகளையும் மடாலய இரகசியங்களையும் இன்றைய கல்வி அறிவால் அளந்தறிய முடியாது. கதிர்காம வடிவேலரது அருளுக்குப் பாத்திரராகிய கப்புகமாரும், வாவாக்களும், முனிவருமே அறிவர். அவர்கள் தொன்மை மறவாது வழிவழியாக மரபுபற்றி வந்த வழிபாடியற்றித் தவம்புரிந்து வருகின்றனர். அவர்கள் கூறும் முறைப்படியே நமது அரசாங்கம் புனித நகரை அமைக்க வேண்டும். விஞ்ஞானமும் சிற்பக் கலையும், வீதி பெருக்கலும் கதிர்காமத்தானுக்கும் கதிர்காமத்துக்கும் ஏற்றனவா

என்பதை அறியவேண்டியவர்களும் அறிவிக்கவேண்டிய வரும் ஆத்மீக ஞானிகளே ஆவர். இவர்கள் கூறும் மறுப்புக்களை அரசாங்கம் அங்கீகரித்தேயாக வேண்டும். சட்டத்துக்கு மேற்பட்டது திருவருள் என்பதைப் பண்டிதரும் பாமரரும் பக்தியால் நன்கறிவர். முன்னைநாள் மட்டக்களப்புக் கதிர்காமத் திருவிழாச் சபைச் செயலாளனாகத் திருப்பணி புரிந்த நான் கதிர்காம மடங்களை அழிக்கவோ மாற்றவோ கூடாது என்ற நல்ல ஆலோசனையைக் கூறுமுகமாக இற்றைவரை சில குறிப்புக்கள் கூறியுள்ளேன்.

இத்தகைய பெருமை வாய்ந்த திருப்பணி பல புரியும் மடாலயங்களைத் தன்னகத்தே கொண்ட கதிர்காமத் திருப்பதி சைவர்களாகிய தமிழ் மக்களுக்கும், புத்தர்களாகிய சிங்கள மக்களுக்கும், முகம்மதியர்களாகிய சோனக மக்களுக்கும் வழிபடுதற்குரிய கோவில்களும், சமாதிகளும், பள்ளிவாயில்களும், பாஞ்சாலைகளும், மடங்களும் அமைந்து இலங்கைச் சமூகத்தாரின் ஒற்றுமைக்கு மூல வித்தாக மிளிர்கிறது. இங்கு செல்லும் யாத்திரிகர் ஒருவரை ஒருவர் சுவாமி என அன்பாக அழைக்கின்றனர். வழியில் வருவாரும், போவாரும் பக்தி நிரம்பிய மனத்துடன் அரோகரா என இனிய இசையில் இயம்புகின்றனர். பண்டிதரும், பாமரரும், பார்ப்பாருஞ், சூத்திரரும், ஆண்டியும், அரசனும், பட்டம், பதவி, சாதி, சமய வேறுபாடு இன்றி ஒப்பற்ற ஒரே ஆத்மீக நிலையில் நின்று மாணிக்க கங்கை நீர் ஆடி, மாணிக்கப்பிள்ளையாரையும், கதிர்காம வடிவேலரையும், புத்த பகவானையும், வெள்ளரச மரத்தையும், பத்தினி அம்மாளையும் தெய்வநாயகி அம்மையாரையும், வள்ளிநாயகியாரையும், கதிரமலையானையும், முத்துலிங்கேசரையும், கதிரை நபிநாயகத்தையும், செல்வக் கதிர்காமத்துள்ள மூத்த பிள்ளையாரையும், கலியாண மடத்துள் அமர்ந்துள்ள பால்குடி வாவாவையும் காணிக்கையிட்டும், அர்ச்சித்தும், கர்ப்பூரங் கொழுத்தியும் வழிபட்டுத் தான தருமம் புரிந்து, நல்லருள் பெற்று இகத்

தில் ஒற்றுமையாக இன்புறுவதோடு இறுதியில் மோட்ச வீட்டையும் அடைந்து பேரானந்தப் பெருவாழ்வினை அடைகின்றனர்.

*"பண்டிதரும் பாமரரும் பார்ப்பாருஞ் சூத்திரரும்*
*அண்டிக் கதிரமலை ஐயரிடம் — ஒன்றாக*
*நின்றநிலை நீயுணரின் நேருமுத்தி தானுனக்கு*
*நன்று கதிரமலை நாடு."*

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம். 319/61.